ஸ்ரீ:
ஸ்ரீமதேராமாநுஜாய நம:

ஹரிஸமய திவாகரம்.

தொகுதி ரு. விபவஹு கார்த்திகைமீ பகுதி ௰௧.
Vol 5. *November & December 1928.* No. 11.

ஸ்ரீவசனபூஷணப் பெயர்ப்பொருள் விளக்கம்.

ஸ்ரீவசனபூஷணம் லோகதேசிகன் அருளிச்செய்த பதினெண் ரஹஸ்யங்களுள் உயிர்ஸ்தானமாய் விளங்குவதொன்றாம். இஃதின்னதெற்றியதென்பது இது தோன்றிய *வரலாற்றை ஆராயவே நன்கு விளங்கும். இதன் பெருமையை விசதவாக்சிகாமணியாகிய மண

* பேரருளாளப்பெருமாள் தம் நிர்ஹேதுக க்ருபையால் மணப்பாக்கம் என்ற ஊரிலெழுந்தருளியிருந்த திருச்சாணூர் நம்பியை விசேஷ கடாக்ஷஞ் செய்தருளி ஆத்மோஜ்ஜீவன ஹேதுவான அர்த்தவிசேஷங்களை அவர் ஸ்வப்பநத்தில் அருளிச்செய்து 'நீவிர் இரண்டாற்றிற்கும் நடுவே (ஸ்ரீரங்கத்தில்) வர்த்திக்கக்கடவீர்; இன்னும் இவை போன்றனவாகிய அர்த்தங்களெல்லாம் மிகவும் தெளிவாக நாம் அவ்விடத்திலே சொல்லுகிறோம்' என்றார். இது கேட்ட திருச்சாணூர் நம்பி ஸ்ரீரங்கம் வந்து பெருமாளை ஸேவித்துப் பேரருளாளர் தமக்கு முன்னருளிய அர்த்தவிசேஷங்களை ஏகாந்தமாயிருக்கிற கோயில் உட்பிரகாரத்தில் ரஹஸ்யமாக அநுஸந்தித்துக் கொண்டிருந்தார். அப்பொழுது பிள்ளைலோகாசார்யர் தம்முடைய அந்தரங்க சிஷ்யர்களுடன் எழுந்தருளி அவ்விடம் ஏகாந்தமாயிருப்பதறிந்து அவ்விடத்தில் சிஷ்யர்கட்கு ரஹஸ்யார்த்தங்களை அருளிச்செய்தார்.

அப்பொழுது திருச்சாணூர் நம்பி அவ்வர்த்தங்களைச் செவி மடுத்து முன்பு தமக்குப் பேரருளாளர் அருளியவையும் இவையும் ஒப்புமையுடையனவாயிருக்கக்கண்டு உள்ப்ரகாரத்திலிருந்து வந்து பிள்ளைலோகாசார்யர் திருவடிகளில் பரவசமுடையவராய்த் தண்டன் ஸமர்ப்பித்து நின்று 'அவரோ நீர்'

வாளமாமுனிகள் 'உபதேசரத்னமாலை'யில் ஏழுபாசுரங்களால் நன்கு விளக்கியருளிச்செய்துள்ளார். மேலும் மணவாளமாமுனிகள் இந்த ஸ்ரீவசனபூஷணத்திற்கு வ்யாக்யானமருளிச்செய்யத் தொடங்கி இதன் பெயர்ப்பொருளைக் குறிப்பிடவந்தவிடத்தில் "ரத்னப்ரசுரமான பூஷணத்திற்கு ரத்னபூஷணமென்று பெயராமாபோலே பூர்வாசார்யருடைய வசனப்ரசுரமாய் அநுஸந்தாதாக்களுக்கு ஔஜ்வல்யகரமாயிருக்கையாலே இதுக்கு வசனபூஷணமென்று திருநாமமாயிற்று" என்று அருளிச்செய்தார்.

இனி, க்ரந்தகர்த்தாவாகிய லோகதேசிகன் இந்நூலிற்கு வசன பூஷணம என்று பெயரிட்டதனுட்பொருளை ஆராய்ந்து வ்யாக்யாதா உரைத்த உரை நுட்பம் ஈண்டாராயப்படும்.

வ்யாக்யாதா, வசனபூஷணமென்பதை உவமைமுகத்தான் விளக்கவந்தவிடத்து 'ரத்னப்ரசுரமான பூஷணத்திற்கு ரத்ன பூஷணமென்று பெயராமாபோலே" என்றருளிச் செய்தார். இங்ஙனம் பொருளுரைப்பதை வடமொழியாளர் * உத்தரபதலோப

என்று தாழ்மையுடன் கேட்டார். லோகாசார்யர், 'அவர் யாவரென்ன' அப்பொழுது இவர் பேரருளாளப்பெருமாள் தமக்கு இவ்வர்த்தவிசேஷங்களை யருளிச்செய்ததையும், இவ்விடத்தில் வர்த்திக்கும்படி நியமித்ததையும் இன்னும் இவ்வர்த்தங்களைத் தெளிவாக இவ்விடத்திலருளிச்செய்வதாக உரைத்ததையும் விண்ணப்பஞ் செய்தார்.

பின்னர் லோகாசார்யரும் நம்பியாரை அபிமானித்தருள இவரும் அன்று முதல் அவருக்கு அந்தரங்கசிஷ்யராய் வர்த்தித்து வந்தார். இவ்வாறு வாழ்ந்து வருகிற காலத்தில் பெருமாள் இவரது ஸ்வப்பனத்தில் 'பிள்ளை யுரைத்த அர்த்தங்கள் மறந்து போகாதிருக்க இவற்றை ப்ரபந்த ரூபமாக்கச்சொன்னோமென்று நீவீர் பிள்ளையிடத்திற் சொல்வீர்' என்று அருளிச்செய்தார். இவரும் அவ்வாறே லோகாசார்யரிடத்தில் விண்ணப்பஞ்செய்ய லோகாசார்யர் 'பெருமாள் திருவுள்ளம் இப்படியிருக்குமாகில் அங்ஙனமே செய்கிறேன்' என்று திருவுள்ளம் பற்றி இப்பிரபந்தத்தை வெளியிட்டருளினர்.

* உத்தரபத லோபஸமாஸமாவது:—தொடர் மொழியின் இறுதிப்பதம் தொக்கு வருவதாம். சாகப்பிரிய: பார்த்திப: என்பது சாகபார்த்திப: என்று வரும். இங்கு ப்ரிய: என்ற உத்தரபதம் தொக்கு நின்றமை காண்க. அது போல ரத்னப்ரசுரபூஷணம் என்பதில் ப்ரசுரம் என்ற இறுதிப்பதம் தொக்கு நின்றதென்க.

ஸமாஸம் என்பர். இவ்வாறு உத்தரபதலோப ஸமாஸமாகப்பொருள் கொள்ளாது ரத்னமாகிய பூஷணமெனப் பண்புத்தொகையாகப் பொருள்கொண்டால் பொருள்பொருந்துமாறில்லை. ரத்னங்களைப் பொன்னிற்குயிற்றுதவிடத்து அவை நன்கு ப்ரகாசிக்கமாட்டா; அஃதன்றி ஆபரணமென்ற பெயரையும் பெறமாட்டா. ஆதலால் அதிகமான ரத்னங்களாலாக்கப்பெற்ற ஆபரணமென்று பொருள் கொள்ளுமாறு விரித்துரைக்கப்பட்டதென்க.

ரத்னங்களால் மிகுதியாகிய ஆபரணத்தில் மிகுதிக்கு நிலைக்களமாயுள்ளது ரத்னமென்பதும், மிகுதிக்கு எதிர்த்தட்டாகிய அற்பத்திற்கு நிலைக்களமாயுள்ளதொன்றுண்டென்பதும் பெறப்படும். இங்கு அல்பதைக்கு நிலைக்களமாயுள்ளது பொன்னும். ஆகவே ரத்னப்ரசுர பூஷணத்தில் அதிகமான பகுதி ரத்னமும், அதின் வேறாகிய பொன்பகுதி சிறிதும் விரவியிருக்கும். அதுபோல வசனங்களால் மிகுதியான பூஷணத்தில் மிகுதிக்கு நிலைக்களமாயுள்ளது வசனமென்பதும் மிகுதிக்கு எதிர்த்தட்டாயிருக்கும் அற்பத்திற்கு நிலைக்களமாயுள்ளதொன்றுண்டென்பதும் பெறப்படும். இங்கு அற்பதைக்கு நிலைக்களமாயுள்ளது அர்த்தமாம். ஆகவே வசனமிகுதியாயும், அர்த்தம் அற்பமாயுமிருக்குமென்பது ஸித்திக்கும். இது பொருந்தாப்பொருளாம். ஆகையால் இவ்வாறு கொள்ளாமல் வசனபூஷணமென்ற திருநாமத்தில் வசன சப்தம் பூர்வாசார்யருடைய வசனபரமாய் அதனின் வேறுபது தமது (பிள்ளை லோகாசார்யரது) வசனமென்று கொள்ளத்தக்கது. இதனால் இதில் பூர்வாசார்யரது வசனமிகுதியாய் தமது வசன குறைவாயிருக்குமென்பது விளங்கியது.

மேலும் எவரும் ஆன்றோரது உரையை மேற்கொள்ளாது நூலியற்றுவரேல் அது ப்ரமாண நூலாக யாவராலும் அங்கீகரிக்கப் படாதொழியும். அதுபோல இந்த வசனபூஷணத்திலும் இக்குறை பாடுண்டோ என்ற ஆசங்கையையகற்ற வ்யாக்யாதா 'பூர்வாசார்யருடைய வசன ப்ரசுரமாய்' என்று அருளிச்செய்தார். இதனால் இது உபதேச சமயங்களில் பூர்வாசார்யர்களால் பரம்பரையாகச் சொல்லப்பெற்றுள்ள வேதஸாரமான வசனங்களின் மிகுதியாலமைக்கப்

பெற்ற ப்ரபந்தமாமென்பது போந்தபொருளாமென்று கொள்ளத் தக்கது. ஆகவே இது ப்ரமாண நூல்களுள் தலைசிறந்ததாயிருக்கு மென்பது தெளியாம். இதுபற்றியே ஸ்ரீவசனபூஷணத்தனியனில் "ஸாംஶாவிஜ ஊஶிஜ ஸாஷ்ணுதாஉிவவேஷ ஸாராஜ ஸംஹஹ ஊஹாரஸ வாக்யஜாதം" "ஸாங்காகிலத்ரமிட ஸம்ஸ்க்ருதரூபவேத ஸாரார்த்த ஸங்க்ரஹ மஹாரஸ வாக்பஜாதம்" என்று ஸகலவேத ஸாரத்தின் சுருக்காயும், மிகவுமினிமைவாய்ந்த வாக்யத்தொகுதி யாலமைக்கப்பெற்றதாயுமுள்ள நூலென்று போற்றப்பெற்றுளது. பூஷணம் என்பதற்கு மனனஞ்செய்வார்கட்கு ஒளியைத்தரத்தக்க தென்று பொருள்கொள்ளத்தக்கதென்பதை யறிவிக்கவே வ்யாக் யாதா "அநுஸந்தாதாக்கட்கு ஔஜ்வல்ய கரமாயிருக்கையாலே" என்று அருளிச்செய்தார்.

இது நிற்க; வ்யாக்யாதா தாமருளிய 'உபதேசரத்ன மாலை' என்ற நூலில் வசனபூஷணம் என்பதின் பொருளை மிகவும் தெளி வாகப் பாசுரரூபமாக அருளிச் செய்துள்ளார். அது வருமாறு:—

"முன்னங்குரவோர் மொழிந்த வசனங்கள்
தன்னைமிகக்கொண்டுகற்றோர்தம்முயிர்க்கு—மின்னணியாச்
சேரச்சமைத்தவரேசீர்வசனபூடணமென்
பேரிக்கலைக்கிட்டார்பின்"

ஸ்ரீவசனபூஷண மென்ற நூலை அருளிச்செய்தவராகிய லோக தேசிகனே அதன் நிலைகண்டு அதற்குப் பொருத்தமான பெயரை வைத்தாரென்று இதனாற் சொல்லப்படுகிறது, "யஊஜ்ஞ ஸஊஃ ஞூஊணം வெஷாஶ்" "தர்மஜ்ஞ ஸமய: ப்ரமாணம் வேதாச்ச" என்றபடி வேதப்பிரமாணத்தைக் காட்டிலும் ஆப்தராகிய பெரியோ ரின் ப்ரமாணமே ப்ரபலப்ரமாணமாகையால் அந்த ப்ரபலப்பிரமா ணத்தையே பெரும்பாலும் மேற்கொண்டு இந்நூலை இயற்றின ரென்பார். 'முன்னங்குரவோர் மொழிந்த வசனங்கடன்னை மிகக் கொண்டு' என்றார். அநித்யமான உடலுக்கு ஆபரணஞ் செய்பவர் சூழ்ந்த இவ்வுலகில் இவர் நித்யமான ஆத்மாவுக்கு ஆபரணஞ் செய் தாராதலால் 'கற்றோர் தம்முயிர்க்கு மின்னணியாச் சேரசமைத்து' என்றார். இந்நூல் வேதவேதாந்தங்களின் ஸாரமாய் பொருளாழ

முடையதாயிருப்பதால் இவ்வர்த்தங்கள் ஆசார்யனிடத்தில் அறியத் தக்கவைகளை நன்றாகக் கேட்டறிந்தவர்கட்கு விளங்குமேயன்றி ஏனையோர்கட்கு விளங்காதென்பது ஒருதலையாதலால் கற்றோர் தம்முயிர்க்கு' என்றார்.

இதனால் நம்பூர்வாசார்யர்கள் பரம்பரையாகப் போனபோனபோற் போற்றி வந்த அர்த்தங்கள் இதில் நிறைந்துள்ளனவென்பதும், அதனாலிது சிறந்த பிரமாணமாகக் கொள்ளத்தக்கதென்பதும், ஸ்வரூப ஜ்ஞானமுடையார்க்கு அறியத்தக்க ஸகலார்த்தங்களும் இதில் அடங்கியுள்ளனவென்பதும் இந்நூலின் பெயர்மாத்திரத்தாலே தெற்றென்றறியக் கிடக்கிறது.

ப. அ.

ஸ்ரீ:

ஸ்ரீராமாநுஜ ஸித்தாந்த ப்ரகாசிகை.

[ஸ்ரீமதுபயவேதாந்த வித்வான் காரப்பங்காடு சிங்கராசார்யஸ்வாமி எழுதுவது.]

(143-ம் பக்கத்தொடர்ச்சி.)

போஜந காலத்தில் ப்ராணாஹுதிகளை போஜந பாத்ரத்தை ஸ்பர்ஸித்துக்கொண்டே செய்யவேணும்; ப்ராணாஹுத்யநந்தரம் பாத்ரஸ்பர்சம் கூடாதென்பதாக கௌதமக்ரியாகாண்டத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

ஆபஸ்தம்ப ஸூத்ரத்தில் ‘‘நாவஜஹீத ஸவஜஹீதவா’’ ‘‘நாபஜஹீத அபஜஹீதவா’’ என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதன் அர்த்தம் போஜநபாத்ரத்தைப் போஜநகாலத்தில்விடக்கூடாது, அல்லது விடலாம் என்பதாம். இந்தவிஷயத்தில் மாதவப்ரப்ருதிகள் ப்ராணாஹுதிபர்யந்தம் விடக்கூடாது; அதற்குப்பின்பு விடலாம் என்று அர்த்தவர்ணனம் பண்ணியிருக்கிறார்கள். இதற்கு வ்யாக்யையான உஜ்வலையில், ‘‘நாவஜஹீத போஜநபாத்ரம் ஸவ்யேநபாணிநா நஹிதம்வேச ஹிதம்வேஷ்டா கிஹ்யஉஹிதம் ப்ரகாராஹாரம் ஸம்ஹவதி

𑌸𑌤𑍍𑌯𑌂 𑌪𑍍𑌰𑌕𑍍𑌰𑌮𑌾𑌤𑍍𑌤𑍁 𑌨𑌿𑌯𑌮𑍍𑌯𑍇𑌤𑌿𑌨𑍍𑌯𑌾𑌯𑍇𑌨 𑌯𑌏𑌵𑌂𑌪𑍍𑌰𑌕𑌾𑌰𑌃 𑌪𑍍𑌰𑌥𑌮𑌂 𑌭𑍋𑌜𑌨𑍇 𑌸𑌏𑌵𑌾𑌨𑍍𑌤𑌾𑌦𑌨𑍁𑌷𑍍𑌠𑍇𑌯𑌃 𑌏𑌵𑌮𑌰𑍍𑌥𑌮𑌿𑌦𑌮𑌿𑌤𑌿" "நாபஜஹீத போஜனபாத்ரம் ஸவ்யேநபாணிநா நமுஞ்சேத் முஞ்சேத்வா கிமர்த்தமிதம்...ப்ரகாராந்தரம் ஸம்பவதி ஸத்யம் ப்ரக்ரமாத்து நியம்யேதிந்யாயேந யஏவம்ப்ரகார: ப்ரதமம் போஜநே ஸஏவ ஆந்தாதநுஷ்டேய: ஏவமர்த்தமிதமிதி" இதற்கு அர்த்தம் போஜன காலத்தில் போஜன பாத்ரத்தை இடது கையால் பிடித்துக் கொள்ளவேணும்; அதவா பிடித்துக்கொள்ளவேண்டியதில்லை. ஆனால் இப்படி இரண்டு ப்ரகாரமாகச் சொல்லியதேதென்னென்னில், ஆதியில் எந்தக்கிரமம் ஏற்பட்டதோ அந்தப்படியே முடிவுவரையில் செய்ய வேண்டும் என்பதற்காக இப்படி இரண்டு ப்ரகாரமாகச் சொல்லப் பட்டது என்று ஹரதத்தர் சொல்லியிருக்கிறார். ஆதலால் போஜந காலத்தில் போஜநபாத்ரஸ்பர்சம் போஜநபர்யந்தம் இருக்கவேண்டு மென்றும், அதவா போஜந காலம்முதல் முடிவுவரையில் பாத்ரஸ்பர்சம் இல்லாமலே யிருக்கவேண்டுமென்றும் ஏற்படுகிறது.

கௌதமக்ரியாகாண்டத்தில் சொல்லியிருக்கிறபடி போஜநகாலத்தில் ப்ராணாஹுதிக்குப் பிறகு பாத்ரஸ்பர்சம் நிஷித்தம் என்று ஏற்படுகிறது. ப்ராணாஹுதி பர்யந்தம் பாத்ரஸ்பர்சம் நியமேந செய்யவேண்டுமென்றும், ததநந்தரம் பாத்ரஸ்பர்சம் அநியதமென்றும் சிலருடையஅபிப்ராயம். சிலர் "நாவஜஹீத கவஜஹீதவா" "நாபஜஹீத அபஜஹீதவா" என்கிற ஸூத்ரத்திலேற்பட்டிருக்கிற விகல்பம் வ்யவஸ்திதவிஷயம். ஆதலால் சிராத்த காலத்தில் ப்ராணாஹுதிபர்யந்தம் பாத்ரஸ்பர்சம் ஆவசியகம்; நித்யபோஜநத்தில் பாத்ரஸ்பர்சமே வேண்டியதில்லை யென்று சொல்லுகிறார்கள்.

இப்படி அநேக பக்ஷங்களிருந்த போதிலும் "நாவஜஹீத" "நாபஜஹீத" என்கிற ஸூத்ரவ்யாக்யாதாவான ஹரதத்தர் சொல்லியபடி போஜநபர்யந்தம் பாத்ரஸ்பர்சமிருக்க வேண்டியது முக்யம்; இல்லாவிடில் தாவத்பர்யந்தம் பாத்ரஸ்பர்சமே வேண்டியதில்லை என்பதுதான் உசிதம். ஏனென்றால் "ஜாடராக்நௌஹுதம் ஹவிஸ்" "ஜாடராக்நௌ ஆஹுதி வக்த்ரகுண்டகே" என்று போஜநமே ஆஹுதிரூபமாகச் சொல்லப்பட்டமையால் ஆஹுதி காலத்தில் பாத்ரஸ்பர்சம்

ஆவசியகமாகையாலே போஜந பர்யந்தம் பாத்ரஸ்பர்சம் இருக்க வேண்டுமென்பது முக்யமே அப்படி முக்யாநுஷ்டானத்துக்கு ஸௌகர்யமில்லாமையாலே இப்படி போஜந பர்யந்தம் பாத்ரஸ்பர்சம் இல்லாமலுமிருக்கிறது.

இது நிற்க, பரிவேஷணவிஷயத்தில் லவணத்தோடே கூடிய வ்யஞ்ஜநத்தை ப்ராணாஹுத்யநந்தரம் பரிவேஷணம் பண்ணவேணுமென்றும் ப்ரஸாதம் வ்யஞ்ஜநம் இவைகளை தெர்வியாலேயே பரிவேஷணம் செய்யவேணுமென்றும் சாஸ்த்ரமிருப்பதால் அப்படியே செய்யவேணுமென்பது சில ஸம்ப்ரதாயஸ்தர்களுடைய அபிப்ராயம். ஆகிலும் "ஸ்வாஹாப்ரணவஸம்யுக்தம்" "ஸ்வாஹாப்ரணவஸம்யுக்தம்" என்று தொடங்கி "ஸமாநாயேதி வஞ்சமீம்" "ஸமாநாயேதி பஞ்சமீம்" என்று சொல்லிவிட்டு, "ஶேஷமந்நம்யதாகாமம் புஞ்ஜீத வ்யஞ்ஜநைர்யுதம்" "சேஷமந்நம்யதாகாமம்புஞ்ஜீத வ்யஞ்ஜநைர்யுதம்" என்று சொல்லப்பட்டிருப்பதாலும் சிராத்தகாலத்தில் ப்ரஸாதம், வ்யஞ்ஜனம் இவைகளுடைய பரிவேஷணம் ப்ராணாஹுதிக்கு முந்திப்பண்ணுகிறபடியாலேயும், காசியட ஸ்மிருதியில் ப்ராணாஹுதிக்குமுந்தி லவணாந்வித வ்யஞ்ஜநபரிவேஷணம் கூடாதென்றும், தெர்வியாலேயே பரிவேஷணம் செய்யவேண்டுமென்றும் சொல்லிவிட்டு, "நிவேதிதம் பகவதே யதந்நம் வ்யஞ்ஜநாந்விதம் ஏவம் நைவநியம: ததந்நபரிவேஷணே" "நிவேதிதம் பகவதே யதந்நம்வ்யஞ்ஜநாந்விதம் ஏவம் நைவநியம: ததந்நபரிவேஷணே" என்று சொல்லியிருப்பதாலும், மற்றஸ்மார்த்தர்களுடைய அநுஷ்டானத்திலும் ப்ராணாஹுதிக்கு முந்தியே வ்யஞ்சனஸஹிதமான அந்நபரிவேஷணம் ஏற்பட்டிருப்பதாலும் இந்த நியமங்களில்லாமலே அந்நபரிவேஷணம் கூடுமென்று தென்னாசார்ய ஸம்ப்ரதாயஸ்தர்களபிப்பிராயம். ஏகாதசி சிராத்தவிஷயம் நிரூபிக்கப்படும்.

தொடரும்.

ஸ்ரீ:

ஸ்ரீ வரமங்கா ஸஹாயம்.

உ ப ந் ய ா ஸ ம்.

[வானமாமலை ஸ்ரீவைஷ்ணவ சங்கத்தின் முதலாவது கூட்டத்தில் ஸ்ரீ. உ. வே. நியாயசிரோமணி கோபாலையங்கார் ஸ்வாமியால் செய்யப்பட்ட உபந்யாசத்திலிருந்து எடுத்து எழுதப்பட்டது.]

ஸ்வமததீபோத்பந்ந ப்ரதிபோதாயநிஷ்டை:
ஸ்திமிதவரதோத்பூர்ய பூர்ணோ நபேக்ஷ: ।
நிகிலஜநஸம்ருத்தி ஸித்திஹேதோர்ப்யபேக்ஷ:
வரவரமுநி வர்யே ப்ரஸ்துதே நித்யயோக: ॥

இந்தப்பத்யம், மணவாளமாமுனிகளின் திருவடிகளில் ஆச்ரயித்த தேவராஜஸ்வாமியால் அருளிச்செய்யப்பட்ட "வரவரமுனிதினசர்யா" என்ற பிரபந்தத்தில் உள்ளது. அங்கு மணவாள மாமுனிகள் தம்நித்யாநுஷ்டானங்களைக் குறைவறச்செய்துமுடித்துக்கொண்டு பின்னர் "யோகஸ்வாபவிநோதஸ்ய" "யுக்தஸ்வப்னாவபோதச்ச" என்று யோகிகளுக்கும் அவர்ஜநீயமாகச் சொல்லப்பட்ட பரமாத்மாவிடத்தில் லயிக்கும்தன்மையதான நித்திரைஸுகத்தை அனுபவிப்பதற்காகச் சயனத்துக்கு எழுந்தருளுவதற்கு முன் "தத: கநகபர்யங்கே" என்று சொல்லப்பட்ட யோகபர்யங்கத்தில் சிறிதுகாலம் வீற்றிருந்து யோகநிஷ்டராய், பரமானந்தத்தை அனுபவிக்குமளவில், அவருடைய சிஷ்யரான தேவராஜஸ்வாமி தம்மாசார்யர் தமக்கு உகந்த ஆசார்யராகிய உடையவரிடத்தில் தம் ஈடுபாட்டை "யதிராஜவிம்சதி" மூலமாகவெளியிட்டது போல தம்மாசார்யரிடத்தில் தமக்குள்ள ஈடுபாட்டை வெளியிடுமிடத்தில் கடைசியாகக் காணப்படுவது இப்பத்யம்.

கீழில் "உந்நித்ரபத்மஸுபகா" "உத்மீலத்பத்மகர்ப்பா" என்று ஆரம்பித்து 'அதனில்பெரியவென்னவா' என்னும்படியான தங்களது அவாவின் போக்குப்படி பலவித வரங்களை வேண்டிக்கொண்டிருந்தபோதிலும் தங்கள் தீர்மானத்தைமுடிவில் தெரிவித்துவிடக்

கருதித்தங்களுடைய ஸகலமனோரதங்களையும் பூர்த்திசெய்யக் கூடிய ஒருவரத்தை இந்தப் பத்பத்தினால் அர்த்திக்கிறார். அப்படிப்பட்டவரமானது மணவாளமாமுனிகளின் கைங்கர்யபரர்களோடு என்றும் நீங்கப்பெறாத சேர்க்கை என்பது இவர்கள் சித்தாந்தம். இங்கு அந்தமணவாளமாமுனிகளின் கைங்கர்யத்தை அர்த்திக்காமல் அந்தக் கைங்கர்யபரர்களுடன் சேர்க்கையை விரும்பக் காரணமென்னவெனில்; ஒருகால் இவர்கள் விரும்பிப்பெற்ற கைங்கர்யப்பேற்றை குணத்ரயத்துடன் குழுமிய ப்ரக்ருதியின் ஸம்பந்தம் நீங்கப்பெறாமையால் ஸத்வம்தலைமடிந்தபொழுது இழக்கவுமமையும் என்று கருதி, உத்ரிக்தஸத்வர்களாகிய பாகவதர்களின் அநுகூலஸஹவாஸத்தையே விரும்பினார்கள். அந்தப் பாகவதர்கள் ஆசார்யனிடம் ந்யஸ்தபரராகையாலே ‹‹மாமேவயே ப்ரபத்யந்தே மாயாமேதாம் தரந்திதே'' ''மாமேவயே ப்ரபத்யந்தே மாயாமேதாம் தரந்திதே'' என்று ப்ரக்ருதியை நிக்ரஹித்திருப்பார்களாதலின் அவர்கள் சேர்க்கையால் தங்களுக்கு கைங்கர்யருசி என்றும் மாறாமலிருக்குமென்பதும் ஒருகாலும் அப்பேறு இழக்கப்பெறாது என்பதும் கருத்து. அந்த ஸ்ரீவைஷ்ணவர்களுடைய ஸம்பந்தமும் சிறிது காலத்துக்கே வேண்டிப்பெறப்படின் உடனே இவர்களுக்கு இடையூறு அடுத்துநிற்பதொன்றுமாகையால் நீங்காத அச்சேர்க்கையே விரும்பப்பட்டது.

அந்த ஸ்ரீவைஷ்ணவ ஸம்பந்தத்தையும் மணவாளமாமுனிகளின் கைங்கர்யமாகிற புருஷார்த்தத்துக்கு ஸாதநமாக அநுஸந்திக்குங்கால் உபாயமும், ப்ராப்யமும் ஒன்றேயென்றிருக்கவேண்டும். தங்கள் ஸ்வரூபத்துக்கு ஹாநி விளையுமென்று நினைத்து அந்த ஸம்பந்தத்தையே போக்யமாக விரும்பினார்கள். இத்தை முதலில் ப்ராப்யமாக விரும்பிப்பெற்றாலும் இதனுடைய ஸ்வபாவப்ர்யுக்தமாய் மேலேவிளையும் புருஷார்த்த பரம்பரை இவர்களுக்குண்டாகத் தட்டில்லையன்றோ! இந்த ஸம்பந்தமும் எங்களுக்கு வேணுமென்று அர்த்திக்கப்பட்டால் ஒவ்வொருவரும் 'இவர்களைத் தவிர மற்றவர்கள் இதுவரை இந்த ஸம்பந்தத்தைப் பெறாமல் பேரிழவுற்றிருந்தனர்' என்று நினைப்பதாகத் தோன்றுகின்றமையால் அது பாகவதாபசார சிந்தை பண்ணினதாக முடியுமென்று நினைத்துத்தாமொருவருமே இதுவரை பெறாதவரென்றும் மற்றவர்கள்

ஏற்கனவே அந்த கோஷ்டியில் அந்வயம்பெற்று விளங்குமவர்களென்றும் தோற்ற எனக்கு என்று ஏகவசனத்தாலே குறிப்பிடப்பட்டது.

இவர்களால் சேர்க்கை விரும்பப்படும் ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு நிரூபகம் என்னவெனில், "வரவரமுநி ப்ருத்யை:" மணவாளமாமுனிகளின் அடியார்களோடு என்கிறார். என்? அவர்களுக்கு வேறு ஊரையாவது குலத்தையாவது குறிப்பிடும் நிரூபகம் இல்லையோவென்னில்; இப்படிப்பட்ட ஸ்ரீவைஷ்ணவர்களின் க்ராமகுலாதி வ்யபதேசம் அவத்யத்தை விளைக்குமென்றுகருதி அத்தைத் தவிர்ந்தவர்களாகையால் 'அகங்காரமாகிற ஆர்ப்பைத்துடைத்தால் ஆத்மாவுக்கு அழியாதபேர் அடியானென்னறிறே' என்னும் ப்ரமாணத்தை ஒட்டி இப்படிச்சொல்லப்பட்டது. அந்த அடிமையும் ஈசுவரவிஷயத்திற் செய்யவமைந்திருக்க இவர்கள் ஆத்மயாதாத்ம்யநிஷ்கர்ஷம் பிறந்த பெரியார்களாகையால் அதை ஆசார்யவிஷயத்தில் செய்து போந்தார்களென்க. அந்த ஆசார்யன் தானும் இவர்களால் கைங்கர்யம் செய்யப்பெற உரியவன் தானேயென 'வரவரமுநி' என்கிறார். இவர் பகவத் ப்ரஸாதலப்த திவ்யஜ்ஞானத்தினராயிருக்கவேக் கண்டுகந்த பெரிய பெருமாள் அழகியமணவாளரென்று தன்னுடைய திருநாமத்தைச் சாற்றப்பெற்றவர். வர-அழகிய, வர-மணவாளன். அல்லது மணவாளமாமுனி என்பதற்குச்சேர வர-அழகிய, வர-மா (உயர்ந்த) முனியென்று கொள்வது. இத்தால் நாமமாத்ரத்தாலேயே தெரியக்கிடக்கிற மஹாப்ரபாவத்தையுடையவரெனப்பட்டது.

இவர்தம் அடியார்களின் வைபவத்தை வெளியிடுகிறது முதல் மூன்றுபாதம். "சுவமதஹேஸநெ:" "அபகதமதமானை:" கர்வமும், அகங்காரமும் நீங்கப்பெற்றவர்கள். அகங்காரமாவது தானே எல்லாம் வல்லவனென்ற நினைவு. இங்கு கர்வமென்று அதற்குக்காரணமான மமகாரத்தைப்பராமர்சிக்கிறது; அகங்காரத்துடன் சேரவேண்டுகையாலே. எல்லாப்பொருள்களும் எனக்கே உரியது என்ற மமகாரத்தினாலேயன்றோ கர்வமுதிப்பது. ஆக இவ்விரண்டு தூர்க்குணங்களும், இவர்களின் ஜ்ஞான பக்தி வைராக்யாதி குணங்களைக் கண்டஞ்சி இரவியின்முன் இருள்போல தன்னடையே ஒழிந்துவிடும். இனிவருந்தியழைத்தாலும் வாராவித்தனை தவிர அவைகள் இவர்களிடம் வந்து அணுகிச்சிலகாலம் இவர்களை வருத்திப் பின்னர் இவர்களது பெருமுயற்சியால் தொலைக்கப்பெற்றவையல்லவென்று அறியற்பாலது. இவ்விரண்டுமே ஸகலபாபங்களுக்கும் மூலமாகையால் இவற்றின் ஸம்பந்தம் அற்றவர்களென்பதிலிருந்து பாபலேசத்தினுடையவும் ஸம்பந்தத்தை ஒருநாளும்

அடையாதவர்களென்று கொள்ளக்கிடக்கிறது. இத்தால் இவர்களுக்கு ஸ்வரூபாநுரூபமான புருஷார்த்தத்தையடைய விரோதிகளாயிருப்பவைகளின் நிவிருத்தி சொல்லப்பட்டது.

விரோதிகளை இவ்வாறு நிவர்த்தித்துக்கொண்டார்களாகிலும் புருஷார்த்தத்தை அடைவதற்குத் தங்களுக்குள்ள அதிகார பூர்த்தியை வெளியிட உபாயபரிக்ரஹம் செய்யவேண்டாவோவென்னவருளிச்செய்கிறார்:— "அந்த்யோபாயநிஷ்டா:" "அந்திமோபாய நிஷ்டை:" கடைசியான உபாயத்தைப்பற்றினவர்களாயும், ஆசார்ய சேஷத்வமாகிற தங்களுடைய நிஷ்க்ருஷ்டஸ்வரூபத்திற்கு அநுரூபமான புருஷார்த்தம் பகவத் கைங்கர்யத்துக்கு எல்லைநிலமாகிய ஆசார்ய கைங்கர்யமாயிருப்பதால் அதற்கு அநுகுணமான உபாயமாகிய ஆசார்யனிடத்தில் தங்களது ஆத்மாத்மீயங்களாகிற ஸகல பரங்களையும் ஸமர்ப்பித்து அவனையே பரிக்கிரகித்துப்போருமவர்கள் என்றதாயிற்று.

இனி இவர்களது உபாயபரிக்ரகம் இவர்கள் பக்கல் பலித்ததோ? அல்லது வெறிதேமுடிவுற்றதோ? பலித்ததாகில் அப்புருஷார்த்த ஸோபானத்தின் முதல்படியையாவது இவர்கள் அடைந்திருப்பது காணத்தக்கதன்றோ என அருளிச்செய்கிறார்.— "அதிகதபரமார்த்தை:" சிறந்த அர்த்த பஞ்சகத்தைத் தெரிந்துகொண்டவர்களாயும் தங்களுடைய உஜ்ஜீவனத்திற்கு இன்றியமையாததாயும், ஆசார்யாநுக்ரஹமன்றி அடைய முடியாததுமான அர்த்தபஞ்சகஜ்ஞானத்தை அந்த ஆசார்யநிஷ்டையினால் கைமேல் பலனாகப்பெற்றவர்களென்றபடி. இத்தையே இவர்கள் அடையப்புகும் புருஷார்த்த பரம்பரைக்கு முதல்படியாகத் தெரிந்துகொள்வதென்று கருத்து.

இனி அந்தஜ்ஞானம் இவர்களுக்குப் பிறந்திருப்பதற்கு அடையாளம் ஏதாவதிவர்கள் பக்கல் உளதோவெனச் சொல்லுகிறார்.— "அர்த்தகாமாநபேக்ஷ:" பொருளின்பங்களில் நசையற்றவர்களாயும், அந்த ஜ்ஞானமில்லாதவர்களால் ப்ராப்யங்களிற் சிறந்ததாக எண்ணப்படும் பொருளின்பமெனவிரண்டையுமறுத்து "… " "ஸமதுக்கஸுக: ஸ்வஸ்த: ஸமலோஷ்டாச்மகாஞ்சந:" என்று தன் ஜ்ஞானத்தினால் த்ரிகுணாத்மகமான ப்ரக்ருதியை வென்று அத்தால் குணாதீதனென்று சொல்லப்படுமவனுக்குரித்தாகிய லக்ஷணங்களுடன் கூடினவர்களென்று கருத்து.

ஆனுலிப்படி நிரதிசயபுருஷார்த்தத்தை லபிக்கத்தங்களிடமுள்ள அதிகார பூர்த்தியை பிறருக்கு உதவார்களோ அல்லது ஒருகால் உதவவேண்டுமானால் அவர்களிடமிருந்து கைம்மாறு கருதுவார்களோவென வருளிச்செய்கிறார்.— ‘‘𑌨𑌿𑌖𑌿𑌲𑌜𑌨𑌸𑍁𑌹𑍃𑌦𑍍𑌭𑌿𑌃’’ ‘‘நிகிலஜநஸுஹ்ருத்பி:’’ ஸமஸ்த ஜனங்களுக்கும் நிருபாதிகமித்ரர்களாய், உலகத்தில் ஜனித்த மாத்ரத்தையே கொண்டு தங்களது ஸ்வாபாவிகப்ரீதியாலே எல்லோரிடமும் சென்று அவர்களைப் போக்குப்படி அநுஸரித்து அவர்களுக்கும் இப்பூர்த்தியை உண்டுபண்ணிப் போருமவர்களென்றதாயிற்று.

ஆக இப்படி இவர்கள் கல்வி கேள்விகளால் தெளிந்து அகங்காரமமகாரங்களைவிட்டும் ஸதாசார்யனை ஆச்ரயித்தும், அதனால் மிகுந்த நற்குண நற்செய்கைகளை யுடையோராக வாழ்ந்தாலும் ‘‘𑌬𑌲𑌵𑌾𑌨𑌿𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌗𑍍𑌰𑌾𑌮𑍋 𑌵𑌿𑌦𑍍𑌵𑌾𑌂𑌸𑌮𑌪𑌿𑌕𑌰𑍍𑌷𑌤𑌿’’ ‘‘பலவாநிந்திரியக்ராமோ வித்வாம்ஸமபிகர்ஷதி’’ என்றபடி இந்திரியங்களின் வசப்பட்டு அதடியாக வந்தகோபம் ஆசைகளாகிற ப்ரபலதுர்க்குணங்களால் ஒருஸமயம் நலியப்பெற்று ப்ரம்மாதிகள்கூடத்தங்கள் பராக்ருதவிரோதிகளை நிக்ரஹித்தும் ப்ராக்ருதபந்துக்களை யனுக்ரஹித்தும் போருமளவில் இவர்களுக்கு ப்ரக்ருதிஸம்பந்தம் நீங்காதிருக்கின்றமையால் அக்குணங்களால் ஒருக்கால் நலிவுஏற்படாதோவென வருளிச்செய்கிறார்.—

‘‘𑌨𑌿𑌰𑍍𑌜𑌿𑌤𑌕𑍍𑌰𑍋𑌧𑌲𑍋𑌭𑍈𑌃’’ ‘‘நிர்ஜிதக்ரோதலோபை:’’ கோபத்தையும் ஆசையையும் ஜயித்தவர்களாயும், இவர்கள் ராமாநுஜ பதாம்போஜஸமாச்ரயண சாலிகளாகையாலே விரிஞ்சாதிகளுடைய நிரங்குசமான ஐச்வர்யத்தையும் த்ருணமாக மதித்திருக்கின்றமையின் அந்த விரிஞ்சாதிகளுக்கு ஒருகால் நலிவு ஏற்பட்டாலும், இவர்களுக்கு எவ்வாறு நலிவு ஏற்படுமென்று கருத்து.

இவ்விதம் அதிகார பூர்த்தி பெற்றிருக்கின்றபடியால் அதறகுப் பலமான ஆசார்ய கைங்கர்யமாகிற புருஷார்த்தத்தையடைந்து தலைக் கட்டினவர்களென்கிறார். ‘‘𑌵𑌰𑌵𑌰𑌮𑍁𑌨𑌿𑌭𑍃𑌤𑍍𑌯𑍈𑌃’’ ‘‘வரவரமுநிப்ருத்யை:’’ இப்படிப்பட்ட ஸ்ரீவைஷ்ணவர்களுடன் ‘‘𑌨𑌿𑌤𑍍𑌯𑌯𑍋𑌗𑌃’’ ‘‘நித்யயோக:’’ என்றுமழியாத சேர்க்கையானதுமே எனக்கு அஸ்து இருக்கட்டும். இதொன்றையே தேவரீர் க்ருபை செய்து தந்தருளவேணு மென்று நிகமிக்கிறார்கள்.

16—8—28. R. KRISHNAIYANGAR, Secretary.

ஸ்ரீ:

ஸ்ரீ கிருஷ்ண சரித்திர விமர்சம்.

[மதுரை ஸம்ஸ்க்ருத காலேஜ் பிரின்ஸிபால் ப்ரஹ்மஸ்ரீ
V. S. ராமசாமி சாஸ்திரிகள் (B. A; B. L.) எழுதுவது.]

முன்னுரை.

ஸ்ரீ கிருஷ்ணபகவானுடைய சரித்திரத்தைக்குறித்து வங்காளத்தில் சில வருடங்கட்கு முன் விளங்கினவரும், ப்ரஸித்த வித்வானும், கவியுமான பாபுவங்கிமசந்திர சட்டர்ஜி என்பவர் வங்காளிபாஷையில் சிறந்த ஓர் உபந்யாஸம் எழுதியுள்ளார். அவர் நமது வேதம் புராணேதிஹாஸங்களையும் மற்றும் ஸம்ஸ்க்ருத க்ரந்தங்களையும் நன்கு பரிசிலனை செய்தும், மேற்றிசையோர் நமது பிராசீனக்ரந்தங்களைப் பற்றி யெழுதியுள்ள நூல்களைப் படித்து அவைகளில் தவறுயிருப்பவைகளை நிராகரணஞ் செய்தும் இவ்வரிய பெரிய உபந்யாஸத்தை இயற்றியுள்ளார். அதைச் சுருக்கித் தமிழில் மொழிபெயர்த்தால் நம்தமிழ்மக்களுக்கு மிகவும் பிரயோஜனப் படுமென்று நம்பி நான் எனக்குத் தெரிந்தவளவில் எழுதத்துணிந்தேன். இதை நம் பத்திரிகாநேயர்களின் கரகமலங்களில் வணக்கத்துடன் ஸமர்ப்பணம் செய்கிறேன்.

സദായുഷം സംപീവപുരാണാം ശ്രവ്യജന ഹരിഷണം।
യശോഹര രക്ഷരം ദിവ്യം തദ്ദേവ വാസ്മാതദേന നമഃ ॥

முதலாவது கண்டம்.

முதலத்யாயம்.

இப்பாரதபூமியின் பெரும்பாலோரான இந்துக்கள் யாவருக்கும் ஸ்ரீகிருஷ்ணபகவான் ஈசுவராவதார மென்ற நம்பிக்கை யிருக்கிறது. மேலும் தமிழ்நாட்டில் எவ்விடத்திலும் ஸ்ரீகிருஷ்ணனுடைய உபாஸனை பெரும்பாலும் அநுஷ்டிக்கப்பட்டு வருகிறது. கிராமந்தோறும் கிருஷ்ணன் கோயில்; வீடுதோறும் கிருஷ்ணபூஜை; மாதம்

மாதம் கிருஷ்ணன் திருவிழா; உத்ஸவம்தோறும் கிருஷ்ணனின் ஊர்வலம்; முகந்தோறும் க்ருஷ்ண நாமம். எவரும் கிருஷ்ணநாம ஸ்மரணை செய்யாமல் வேறிடத்திற்கு யாத்திரை புறப்படுவதில்லை. கிருஷ்ணநாமாவை எழுதாமல் யாவரும் கடிதமெழுதுவதில்லை. பிச்சைக்காரரும் 'ஹரே: க்ருஷ்ணுபாஹம:' என்று சொல்லாமல் பிச்சை யெடுப்பதில்லை. ஏதாவது அபசப்தம் காதில் விழுந்தால் 'கிருஷ்ண கிருஷ்ண' என்று சொல்லி நாம் காதை மூடிக்கொள்கிறோம். வீட்டில் வளர்க்கும் கிளிகளுக்கும் 'கிருஷ்ண கிருஷ்ண' என்று உச்சரிக்கும்படி நாம் கற்பிக்கிறோம்.

"𑌕𑍃𑌷𑍍𑌣𑌸𑍍𑌤𑍁 𑌭𑌗𑌵𑌾𑌨𑍍 𑌸𑍍𑌵𑌯𑌂" "கிருஷ்ணஸ்துபகவாந்ஸ்வயம்" என்று இவ்விதமான நம்பிக்கையிருப்பதால் எல்லாச்சமயங்களிலும் கிருஷ்ணபூஜை, கிருஷ்ணநாம ஸ்மரணம், கிருஷ்ண கதை இவைகளெல்லாம் தர்மத்திற்குச் சிறப்பைக் கொடுக்கிறது. எச்சமயத்திலும் ஈசுவரஸ்மரணத்தைக் காட்டிலும் மனிதருக்கு வேறு மங்களமென்ன விருக்கிறது?

ஆனால் சிலர் பகவானை யென்னவிதமாய் எண்ணுகிறார்கள்? பால்யத்தில் திருடனென்றும் வெண்ணெய் தயிர் திருடித்தின்றானென்றும்; குமரப்பருவத்தில் விடனென்றும் அநேக கோபஸ்திரீகளின் கற்பை யழித்தானென்றும்; முதிர்ந்த வயதில் வஞ்சகனென்றும் வஞ்சனை மூலமாய் துரோணர் முதலானவர்களின் ப்ராணனை வாங்கச் செய்தானென்றும் நினைக்கிறார்கள். பகவானின் சரித்திரம் இவ்விதமாயிருக்குமா? எவர் கேவலம் சுத்தஸத்வரோ எவரிடமிருந்து எல்லா சுத்தியும் வருகிறதோ எவருடைய பெயரை ஸ்மரித்த மாத்திரத்தில் அசுத்தியும் பாபமும் விலகி விடுகிறதோ அவர் மனுஷ்யாவதாரம் செய்து பாபத்தைச் செய்தாரென்பது பொருந்துமா?

பகவத் சரித்திரத்தை இவ்விதமாகக் கற்பனை செய்ததானது பாரத வருஷத்தின் பாபவெள்ளத்தைப் பெருக்கிற்று. சனாதன தர்ம விரோதிகள் இவ்விதமாகப் பிதற்றிக்கொண்டு தங்களுக்கு ஜயங்கிடைத்ததாக நினைக்கிறார்கள். நாம் உண்மையாக கிருஷ்ணனை

பகவானென்று நம்பியிருக்கிறோம். மேற்றிசைப் படிப்பினால் இந்நம்பிக்கை தவறியிருக்கிறது. பகவானான ஸ்ரீக்ருஷ்ணனின் உண்மையான சரித்திரம் புராண இதிஹாஸங்களில் வருணிக்கப் பெற்றிருக்கிறது. அதைத் தெரிந்து கொள்வதற்காக நம்மால் முடியும்வரை புராண இதிஹாஸங்களை ஆராய்ச்சி செய்வோம். அவைகளிலிருந்து க்ருஷ்ணனைக் குறித்த எவ்விதகெட்ட எண்ணங்கள் அப்ரமாணிகரிடம் பரவியிருக்கின்றனவோ அவைகளெல்லாம் ஆதாரமற்றவைகள் என்று வெளியாகும். உபந்யாஸகர்களால் க்ருஷ்ண சம்பந்தமாகச் செய்யப்படும் உபந்யாஸங்களெல்லாம் மிகவும் தூய்மை வாய்ந்தவைகள்; இத்தகைய புண்யசரித்திரம் வேறெவ்விடத்திலும் காண்பதரிது.

எவ்விதமான ஆராய்ச்சியால் நாமிந்தக் கொள்கையைக் கைக்கொண்டோமென்று, அதைத் தங்களுக்குத் தெரிவிப்பது என் நூலின் முக்ய உத்தேசம். மேலும் பகவானின் கதையை ஆராய்ச்சி செய்வதால் விசேஷ நன்மையிருக்கிறது. நமக்கு எவ்விதம் க்ருஷ்ணனை பரமாத்மாவென்று நம்பிக்கை யிருக்கிறதோ அவ்விதமாகவே இதைப்படிப்போர்களுக்கும் நம்பிக்கையை உண்டாக்க வேண்டுமென்று நம்முடைய கொள்கையல்ல. இந்நூலில் நாம் மானுஷபாவத்தையே ஆராய்வோம். இந்து தர்மங்கள் எவை? என்று தெரிந்து கொள்வதில் க்ருஷ்ணனுடைய சரித்திரத்தின் ஆராய்ச்சி மிகவும் பயனைக் கொடுக்கும். இச்சரித்திரம் அறியாவிடில் புராதன ஆசாரங்களின் நிலைமையைப்பற்றிக் கொஞ்சமும் தெரிந்து கொள்ள முடியாது.

இதைத் தவிர நமக்கு வேறோர் பெரிய உத்தேசமிருக்கிறது. முன்னால் "தர்மதத்வம்" என்றோர் புத்தகம் வெளியிடப்பட்டது. அதிலிருந்து நாம் சிலவிஷயங்களைத் தெரிந்து கொண்டோம். அவை யாவன:— (1) மனிதனுக்கு எவ்விதமான பக்திகளிருக்கின்றன? (2) மனிதர்களின் தர்மங்கள் எவை? (3) ஒருவருக்கொருவரின் விருத்திகளின் ஒற்றுமை. அவைகளின் இன்பம்:— இப்பொழுது இவ்விஷயங்களைப் பூர்ணமாய் ஆராய்ச்சி செய்வது ஒரே சமயத்தில் முடியாத காரியம். இவ்விஷயத்தைப் பற்றி முன் சொன்ன க்ரந்

தத்தில் சொல்லி யிருக்கிற விஷயங்களிற் சிலவற்றை இங்கு குறிப்போம்.

சீடன். ஞானத்தில் பாண்டித்தியமும் ஆராய்ச்சியில் திறமையும், காரியத்தில் கண்ணேக்கமும், நினைவில் தருமசிந்தையும், நல்ல ரஸங்களின் சுவையறிவும், இவையாவும் மனதின் முதிர்ச்சியைக் காண்பிக்கின்றன. மேலும் இவைகளைத் தவிர சரீர சப்பந்தமான முதிர்ச்சியும் இருக்கிறது. அதாவது சரீரம் பலமுள்ளதாயும் நோயற்றதாயும் எவ்வித சரீர காரியத்திற்கும் உதவுவதாயும் இருத்தல் வேண்டும். இவ்வித ஆதர்ச (உதாரணம்; மாதிரி) த்தை எவ்விடம் காண்போம் இவ்விதமான மனிதனை நாம் கண்டதில்லை

குரு. மனிதரில் காண்பதரிது. ஈசுவரனே எல்லா குணங்களும் வாய்ந்த பூரணமான உதாஹரணம். அனந்த ப்ரகிருதியான ஈசுவரன் உபாசனையின் முதலவஸ்தையில் பக்தருக்கு ஆதர்சமாகப் புலப்படுவதில்லை. அவருடைய குணதிசயங்களைப் பார்த்து ஈசுவரத்தன்மையை ஆராய்ந்து மனித உருக்கொண்ட ஈசுவரனை மனதின் நினைந்து நினைந்து சிந்திப்பவனெவனே அவனுக்கு ஓர் ஆதர்சமாகப் புலப்படுகிறார். இவ்விதமாகவே கிரிஸ்துவர்களுக்கு இயேசுகிரிஸ்து ஆதர்ஶம். பௌத்தர்களுக்கு சாக்கிய சிம்ஹ ஆதர்ஶம். தருமத்தை ஓங்கச் செய்த ஆதர்சமானது எவ்விதமாக இந்து சாஸ்திரங்களிலிருக்கிறதோ அவ்விதமான ஆதர்சம் இவ்வுலகில் எச்சமயங்களின் புத்தகங்களிலும் கிடையாது. எந்த ஜாதியிலும் கிடைக்கவில்லை. ஜநகர் முதலிய ராஜரிஷிகள் நாரதர் முதலிய தேவரிஷிகள் யாவரும் பிந்திய ஆதர்சங்கள். அவர்களிலும் இராமசந்திரர், யுதிஷ்டிரர், அர்ஜுனன், லக்ஷ்மணர், தேவவிரத பீஷ்மர் முதலிய க்ஷத்திரியர்கள் ஸம்பூர்ண ஆதர்சங்கள். இவர்களிடம் எவ்விதத்திலும் நிறைவு காணப்படுகிறது. அவர்கள் ஸிம்ஹாசனத்திலிருந்துங் கூடப் பற்றற்றவர்கள்; கையில் வில்லேந்தியும் தருமம் அறிந்தவர்கள்; அரசர்களாகியிருந்தும்

பண்டிதர்கள்; சக்தியுடையவர்களாயிருந்தும் யாவரிடத்தும் பிரீதிவைப்பவர்கள். ஆனால் இவ்வெல்லா ஆதர்சங்களைக் காட்டிலும் இந்துக்களுக்கு மேலான ஆதர்சம் ஒன்றுண்டு. எவரிடமிருந்து யுதிஷ்டிரர் தருமத்தைக் கற்றுக்கொண்டாரோ, அர்ஜுனன் எவருடைய சிஷ்யனோ, ராமலக்ஷ்மணர்கள் எவரின் அம்ச பூதர்களோ, எவரின் சரித்திரத்திற்கு ஒப்பாக மஹாமகிமை பொருந்திய பிறிதொரு சரித்திரம் எப்பாஷையிலும் சொல்லப்படவில்லையோ அவரே நமக்கு மேலான ஆதர்சம். இந்த தத்வத்தை பிரமாணமூலமாக மெய்ப்பிப்பதற்காகவே நாம் ஸ்ரீ க்ருஷ்ண சரித்திரத்தை ஆராயத் தொடங்கினோம்.

இரண்டாவது அதிகாரம்.

கிருஷ்ணனுடைய சரித்திரம் இவ்விதமாக இருக்கிறது அதையறியும் வகை யெப்படி?

ஆதியில் இதையறியும் விஷயத்தில் இரண்டு பெரிய தடைகளிருக்கின்றன. ஸ்ரீ கிருஷ்ணன் பூமண்டலத்தில் அவதாரம் செய்தாரென்று எவர்களுக்கு நம்பிக்கை இருக்கிறதோ அவர்களின் கதை இவ்விதமாயிருக்கிறது. இதை வாசிப்பவர்கள் யாவரும் இவ்வித நம்பிக்கை யுள்ளவர்களல்ல. எவர்களுக்கு இவ்விதமான நம்பிக்கை யில்லையோ அவர்கள் கிருஷ்ண சரித்திரத்தின் ஆதார கதை யென்ன என்று வினவுகிறார்கள். ஸ்ரீகிருஷ்ணனென்று பெயர் வாய்ந்த யாதொரு வ்யக்தி எப்பொழுதாவது இருந்த துண்டா? அதற்காதார மென்ன? இருந்திருந்தால் அவருடைய சரித்திரத்தை எவ்விதமாயறியலாம்? அதை யறிவதற்கெவ்வித உபாயங்களுண்டு? நாம் முதலில் இரண்டு சந்தேகங்களைப் பற்றி ஆலோசித்தல் வேண்டும். கிருஷ்ணனுடைய விருத்தாந்தம் கீழே கண்ட க்ரந்தங்களினின்று அகப்படுகிறது. (1) மஹாபாரதம் (2) ஹரிவம்சம் (3) புராணங்கள். (இவைகளில் புராணங்கள் 18) சிவபுராணங்களில் க்ருஷ்ணன் வரலாறு கூறப்படவில்லை. அடியிற்கண்ட புராணங்களில் அவர் வரலாறு சொல்லப்பட்டிருக்கிறது. (1) பிர்ம்ம புரா

ணம் (2) பத்ம புராணம் (3) விஷ்ணுபுராணம் (4) வாயு புராணம் (5) ஸ்ரீபாகவதம் (10) பிர்மவைவர்த்த புராணம் (13) ஸ்கந்த புராணம் (14) வாமன புராணம் (15) கூர்ம புராணம்.

மஹாபாரதத்திலும் மேலேகண்ட புராணங்களிலும் கிருஷ்ணனின் சரித்திர விஷயத்தில் அநேக பேதங்களிருக்கின்றன. மஹாபாரதத்தில் எவ்விஷயங்கள் காணப்படுகின்றனவோ அவைகள் ஹரிவம்சத்திலும் புராணங்களிலும் கிடையா. ஹரிவமிசத்திலும் புராணங்களிலும் எவை காணப்படுகின்றனவோ அவை பாரதத்தில் காணப்படுவதில்லை. இப்பேதங்களுக்குக் காரணம் ஒன்றுண்டு. மஹாபாரதமானது பாண்டவர்களின் இதிஹாசம். ஸ்ரீக்ருஷ்ணன் பாண்டவர்களின் நேயன், அவர்களுக்கு உதவி புரிவோன். அவர் பாண்டவர்களுக்குச் சகாயமாயிருந்து எவ்விதகாரியம் செய்தாரோ அவை மஹாபாரதத்தில் காணப்படுகின்றன. பிரசங்க க்ரமத்தில் வேறு சிற்சில கதைகளையும் காணலாம். அவருடைய சரித்திரத்தின் மீதிபாகங்கள் மஹாபாரதத்தில் சொல்லப்படாமையால் ஹரிவம்சமென்ற வேறொரு க்ரந்தம்இயற்றப்பெற்றது. அப்பாகங்களை ஹரிவம்சத்தில் காணலாம். பாகவதத்தில் இவ்விதமான கதையிருக்கிறது. வியாசர் நாரதரிடம் மஹாபாரதத்தின் முடிவுபெறுமையைப்பற்றிச் சொன்னர். நாரதர் வியாசருக்குக் கிருஷ்ண சரித்திரத்தை இயற்றும்படி உபதேசித்தருளினர். ஆகையால் மஹாபாரதத்தில் எவ்விதம் இருக்கிறதோ பாகவதத்திலாவது வேறு புராணங்களிலாவது அவ்விதமாகவில்லை. மஹாபாரதத்தில் எவைவிடப்பெற்றிருக்கின்றனவோ அவைகளே காணப்படுகின்றன.

ஆகையால் மஹாபாரதம் எல்லாவற்றிற்கும் முதன்மை பெற்றிருக்கிறது. ஹரிவம்சம் முதலியன இதிற்காணப்படாதவைகளைப் பூர்த்தி செய்வதற்காகவே யேற்பட்டன. எல்லாவற்றிற்கும் முன்பு எது இயற்றப்பட்டதோ அதே எல்லாவற்றைக் காட்டிலும் மௌலிகக் கிரந்தமாகும். மகாபாரதம் ஹரிவம்சம் பதினென் புராணங்கள் இவையாவும் ஒருவராலேயே இயற்றப்பட்டனவென்று சொல்லப்பட்டிருக்கிறது. யாவும் வியாசமஹரிஷியால் செய்யப்பட்டன. இது உண்மையா அல்லவாவென்று விசாரித்தல் இப்

பொழுது பொருந்தாது. மகாபாரதத்தில் இதிகாசகதையாவது உண்டா இல்லையாவென்று பின்னால் விசாரிப்போம். மகாபாரதத்திலில்லாவிடில் ஹரிவம்சத்திலாவது ஐதிஹாசிக தத்வத்தைக் குறித்துப் பரிசீலனை செய்வது வீணேயாகும்.

இச்சமயத்தில் எந்த விசாரம் செய்யப் புகுந்தோமோ அதில் இரண்டு பக்கத்திலும் இரண்டு விதத்தடை யிருக்கின்றன. ஓர் பக்கத்தில் ஸம்ஸ்கிருத பாஷையில் எவ்வித கிரந்தமியற்றப் பட்டாலும் அவையாவும் தீர்க்கதர்சிகளான ருஷிகளாற் செய்யப்பட்டன, யாவையும் சந்தேகமற்றவுண்மைகள், அவைகளையே நாம் கைக்கொள்ளல் வேண்டும், என்று நினைப்பவரும் உளர். வேதவிபாகம், லக்ஷம் ஶ்லோகங்கள் நிறைந்த மஹாபாரதம், ஹரிவம்சம், பதினெண்புராணங்கள் இவையாவும் ஒருவராற் செய்யப்பட்டன.

அக்காலத்திலிருந்து இற்றைக்கு ஐயாயிர வருடங்களுக்கு மேலாயிற்று இவையாவும் கலியுகத்தின் ஆரம்பத்தில் நிகழ்ந்தவைகள். அநேகர்கள் இதை ஆக்ஷேபிக்கலாம். இதுதான் ஒரு பக்கத்திருந்துவரும் தடை. மற்றோர் பக்கத்தில் ஐரோப்பிய பாண்டித்தியம் தடையாயிருக்கிறது. ஐரோப்பா அமெரிக்கா தேசங்களில் சிலர் ஸம்ஸ்க்ருதம் கற்றிருக்கின்றனர். அவர்கள் ப்ராசீன ஸம்ஸ்க்ருத க்ரந்தங்களிலிருந்து ஐதிஹாஸிகதத்வத்தைத் தெரிந்தெடுக்கப் புகுந்தனர். அவருள் ஒரு சிலர் ஸ்வாதீன மற்றதாயும் துர்ப்பலமாயுமுள்ள இந்து ஜாதி எக்காலத்தில் நாகரீகம் பொருந்தினதாயிருந்தது? அந்நாகரீகமும் மிகவும் பழமையானது என்பர். அவர்களில் இரண்டொருவர் தவிர மற்றவர் பாரத வருஷத்தின் ப்ராசீன கௌரவத்தை அழிக்கப் புகுந்தனர். பாரத வருஷத்தில் காணப்படும் எல்லாக்ரந்தங்களும் பிற்காலத்தவைகள். அவைகளில் காணப்படும் விஷயங்களும் பிற்காலத்தவைகளில் காணப்படும் விஷயங்களும் முழுப்பொய்; எதிர் தேசங்களிலிருந்து திருடப்பட்டன என்பர். யானவைக்ய ஹோமரின் காப்பியத்தைப் பார்த்து இராமாயணம் எழுதப்பட்டதென்று ஒருவர் சொல்லுகிறார். பகவத் கீதை பைபிளின் சாயாமாத்திரம் என்று மற்றொருவர் உரைக்கிறார். இந்துக்களின் ஜோதிடம், சீன யவன கால்டீப ஜாதிகளிடமிருந்தடையப்

பட்டனவென்றும் இந்துக்களின் கணிதம் பிறர்களிடமிருந்து கற்றுக் கொள்ளப்பட்டதென்றும் அக்ஷரங்கள் வேறு யாரிடமிருந்தோ தெரிந்து கொள்ளப்பட்டதென்றும் வேறு சிலர் கூறுகிறார்கள்.

இவைகளை உறுதிப்படுத்துவதற்காக மூலஸூத்ர இந்துக்களின் க்ரந்தங்களில் அவர்களின் பெருமையைக் குறித்துக் காணப்படுகிறவையெல்லாம் பொய்யானவைகள் பிரக்ஷிப்தங்கள் என்பதே. எவைகள் இந்துக்களுக்கு விரோதமாகக் காணப்படுகின்றனவோ அவைகளே உண்மைகள். பாண்டவர்களைப்போன்ற வீரபுருஷர்களின் கதைகளெல்லாம் பொய்யானவைகள். பாண்டவர்களென்பது கவியின் கற்பனை. ஆனால் பாண்டவ பத்தினியான துரௌபதைக்கு ஐந்து புருஷர்கள் உண்டென்பது மெய், ஏனென்றால் புராதன இந்துக்கள் நாகரீகமற்றவர்களாயிருந்தார்கள். அக்காலத்துப் பெண்டிர்களுக்கு அநேகரை மணம்புரிந்துகொள்வது வழக்கமாயிருந்தது. ஒருவர் பழைமையான இடிந்த மாளிகையில் ஆடையில்லாத ஒரு பதுமையைப் பார்த்து இத்தேசத்தில் முற்காலத்திய ஆடவர்கள் ஆடையே அணியாதிருந்தனரென்று இவ்வாறு உறுதி செய்கின்றனர். இவ்விதமாகப் பிதற்றுவோரின் கொள்கைகளைப் பரிசிலனை செய்வதில் யாதொரு பயனுமில்லை. ஏனென்றால் நாம் சுதேசிகளான பத்திரிகாநேயர்களை நோக்கி எழுதப்புகுந்தோம். இந்துக்களின் விரோதிகளுக்காக எழுதவில்லை. நம் சுதேச ஜனங்களில் சிற்சில படிப்பாளிகள் மேற்சொன்னோர்களின் அபிப்பிராயங்களையே தழுவுகிறார்களென்பது மிகவும் வருந்தத்தக்கது. அவர்கள் தாங்களாகவே யாதொரு பரிசிலனையும் செய்யாமல் ஐரோப்பியர்களின் அபிப்பிராயங்களையே கைக்கொள்கிறார்கள். எவர்களின் அபிப்பிராயத்தில் ஐரோப்பியர்களின் வழக்கங்களே நல்லவைகள் என்றும் நம் தேசத்து க்ரந்தங்கள் படிப்பதை விலக்கவேண்டுமென்றும் தோன்றுகிறதோ நம் தேசத்துப் பிக்ஷைக்காரர்களுக்கு பிக்ஷைகொடுக்கக் கூடாதென்று எவர் கருதுகிறார்களோ, அவர்களுக்காக நாம் ஒன்றும் செய்ய முயலவில்லை. ஆனால் நமது படிப்பாளிகளில் அநேகர்கள் உண்மையை விரும்புகிறவர்களாகவும் சுதேசப் பிரியர்களாகவும் இருக்கின்றனர். அவர்களுக்காக எழுத முயலுவோம்.

தொடரும்.

ஸ்ரீ:

யக்ஷப்ரச்நம்.

(174-ம் பக்கத்தொடர்ச்சி.)

(௯௰) யக்ஷ:- 𑌰𑌾𑌜𑌨𑍍𑌕𑍁𑌲𑍇𑌨 𑌵𑍃𑌤𑍍𑌤𑍇𑌨 𑌸𑍍𑌵𑌾𑌧𑍍𑌯𑌾𑌯𑍇𑌨 𑌶𑍍𑌰𑍁𑌤𑍇𑌨𑌵𑌾 ।
𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑍍𑌯𑌂 𑌕𑍇𑌨𑌭𑌵𑌤𑌿 𑌪𑍍𑌰𑌬𑍍𑌰𑍂𑌹𑍍𑌯𑍇𑌤𑌤𑍍 𑌸𑍁𑌨𑌿𑌶𑍍𑌚𑌿𑌤𑌂 ॥

ராஜந்குலேந வ்ருத்தேந ஸ்வாத்யாயேந ச்ருதேநவா
ப்ராஹ்மண்யம் கேநபவதி ப்ரப்ரூஹ்யேதத் ஸுநிச்சிதம்.

(இ-ள்) அரசனே! ப்ராஹ்மணத்தன்மை ஏற்படுவது குலத்தினாலோ? அல்லது ஒழுக்கம், வேதமோதுதல், வேதார்த்தங்கேட்டல் என்ற இவைகளாலோ? நிச்சயமாய்ச் சொல்லுவாயாக; எ-ம்.

தர்ம:- 𑌶𑍃𑌣𑍁𑌯𑌕𑍍𑌷 𑌕𑍁𑌲𑌂𑌤𑌾𑌤 𑌨𑌸𑍍𑌵𑌾𑌧𑍍𑌯𑌾𑌯𑍋𑌨𑌚 𑌶𑍍𑌰𑍁𑌤𑌂 ।
𑌕𑌾𑌰𑌣𑌂 𑌹𑌿 𑌦𑍍𑌵𑌿𑌜𑌤𑍍𑌵𑍇𑌚 𑌵𑍃𑌤𑍍𑌤𑌮𑍇𑌵 𑌨𑌸𑌂𑌶𑌯 ॥

ச்ருணுயக்ஷ குலம்தாத நஸ்வாத்யாயோநச ச்ருதம்
காரணம் ஹித்வஜத்வேச வ்ருத்தமேவ நஸம்சய.

(இ-ள்) (114) யக்ஷனே! கேட்பாயாக ப்ராஹ்மணத்தன்மையின் விஷயத்தில் குலமும், வேதாத்யயனமும், வேதார்த்தத்தைக் கேட்டலும் என்ற இவைகள் காரணமாவதில்லை. ஒழுக்கமே காரணமாம்; எ-ம்.

𑌵𑍃𑌤𑍍𑌤𑌂 𑌯𑌤𑍍𑌨𑍇𑌨 𑌸𑌂𑌰𑌕𑍍𑌷𑍍𑌯𑌂 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑍇𑌨 𑌵𑌿𑌶𑍇𑌷𑌤𑌃 ।
𑌅𑌕𑍍𑌷𑍀𑌣 𑌵𑍃𑌤𑍍𑌤𑍋 𑌨𑌕𑍍𑌷𑍀𑌣𑍋 𑌵𑍃𑌤𑍍𑌤𑌤𑌸𑍍𑌤𑍁 𑌹𑌤𑍋𑌹𑌤𑌃 ॥

வ்ருத்தம் யத்நேந ஸம்ரக்ஷ்யம் ப்ராஹ்மணேந விசேஷத:
அக்ஷீண வ்ருத்தோ நக்ஷீணோ வ்ருத்த தஸ்து ஹதோஹத:

---

(114) குலம் வேதாத்யயனம் வேதார்த்தத்தைக் கேட்டல் என்ற இவைகள் ப்ராஹ்மணத் தன்மைக்குக் கௌணகாரணமாமேயன்றி முக்ய காரணமாகாதாதலால் இங்கு ப்ராஹ்மணத்தன்மைக்கு இவைகாரணமாக மாட்டா என்று சொல்லப்பட்டது. இதனால் ஒழுக்கமே ப்ராஹ்மணத்தன்மைக்கு முக்ய காரணமாமென்பது பெறப்பட்டது. “மறப்பினு மோத்துக் கொளலாகும் பார்ப்பான், பிறப்பொழுக்கங் குன்றக்கெடும்” என்றதனாலும் ஒழுக்கத்தினது சிறப்பு நன்கறியலாம்.

(இ-ள்) ப்ராஹ்மணன் விசேஷமாக நல்லொழுக்கத்தை ப்ர யாசைப்பட்டாவது காப்பாற்ற வேண்டும். கெடாத ஒழுக்கத்தை யுடையவன் கெடுவதில்லை. ஒழுக்கங்கெட்டவன் கெட்டவனே யாவன்; எ-ம்.

> வ௦காஃ வா௦காலெஶ்வ யெவாெந௱ ஶாஸ்த்ர விஷகாஃ।
> ஸவெ௨வ௱ஸநிெநா ௨௸வ௨ாஃ யஃ க்ரியாவாநு ஸவண்டிதஃ

> படகா: பாடகாச்சைவ யேசாந்யே சாஸ்த்ர சிந்தகா:
> ஸர்வே வ்யஸநிநோ மூர்க்கா: ய: க்ரியாவாந் ஸ பண்டித:

(இ-ள்) சாஸ்திரத்தைப் பயில்கின்றவர்களும், பயிற்றுவிப்ப வர்களும், மற்றும் மனனஞ் செய்கின்றவர்களுமாகிய யாவரும் (ஒழுக்கமில்லாதவிடத்து) க்லேசத்தை யடைந்த மூடர்களாகவே ஆகிறூர்கள். ஆதலால் எவன் ஒழுக்கமுடையவனே அவனே பண்டிதனுவான்; எ-ம்.

> வதுெவ௨ெதாவி ஒுவ௱௨த்தஃ ஸஶூஜ்ராதிரிவ௱ெத।
> யொஜிெஹாதூ வெராதாஜஃ ஸவ்ராஹ்மண உதிஸ்மூதஃ॥

> சதுர்வே தோபி துர்வ்ருத்த: ஸசூத்ராததிரிச்யதே
> யோக்நிஹோத்ர பரோதாந்த: ஸப்ராஹ்மண இதிஸ்ம்ருத:

(இ-ள்) நான்கு வேதங்களையும் பயின்றவனுயிருப்பினும் கெட்ட ஒழுக்கங்களை மேற்கொண்டவனுயிருப்பனேல் அவன் சூத் ரனைக் காட்டிலும் தாழ்ந்தவனே யாவன். எவன் அக்நிஹோத்ரம் முதலியவற்றை இடைவிடாது செய்பவனும், அடக்கமுள்ளவனு மாக இருக்கிறுனே அவனே ப்ராஹ்மணனென்று மதிக்கப்படு வான்; எ-ம்.

(௩௧) யக்ஷ:- வ்ரியவசநவாதீ கி௦லமெத விம்ருஶித காய௱காஃ கி௦லமெத।
வஹுமித்ரகாஃ கி௦லமெத யவெ௨ாதஃ கி௦லமெத ॥

> பரியவசநவாதீ கிம்லபதே விம்ருசித கார்யகர: கிம்லபதே
> பஹுமித்ரகர: கிம்லபதே தர்மேரத: கிம்லபதே:

(இ-ள்) இன்சொற் சொல்பவன் என்ன பெறுகிறுன்? ஆ ராய்ந்து காரியஞ்செய்பவன் யாது பெறுகிறுன்? பலநண்பர்களை

யுடையவன் என்பெறுகிறான்? தருமத்திற் பற்றுடையவன் யாது பெறுகிறான்? எ-ம்.

தர்ம:- 𑌪𑍍𑌰𑌿𑌯𑌵𑌚𑌨𑌵𑌾𑌦𑍀 𑌪𑍍𑌰𑌿𑌯𑍋 𑌭𑌵𑌤𑌿 𑌵𑌿𑌮𑍃𑌶𑌿𑌤 𑌕𑌾𑌰𑍍𑌯𑌕𑌰𑍋 𑌽𑌧𑌿𑌕𑌂 𑌜𑌯𑌤𑌿 ।

𑌬𑌹𑍁𑌮𑌿𑌤𑍍𑌰𑌕𑌰𑌃 𑌸𑍁𑌖𑌂 𑌵𑌸𑌤𑍇 𑌯𑌶𑍍𑌚 𑌧𑌰𑍍𑌮𑌰𑌤𑌃 𑌸 𑌗𑌤𑌿𑌂 𑌲𑌭𑌤𑍇

ப்ரியவசநவாதீப்ரியோபவதிவிம்ருசிதகார்யகரோதிகம்ஜயதி
பஹுமித்ரகர: ஸுகம்வஸதேயச்சதர்மரத: ஸகதிம்லபதே:

(இ-ள்) (115) இன்சொற் சொல்பவன் யாவர்க்கும் இனியனாகிறான். (116) ஆராய்ந்து கார்யஞ் செய்பவன் மிக்க வெற்றியை அடைகின்றான். (117) பலநண்பர்களையுடையவன் இன்பமாக வாழ்கின்றான். (118) தர்மத்திற் பற்றுடையவன் எவனோ அவனே நற்கெதி யடைகின்றான்; எ-ம்.

தொடரும்.

---

(115) "இன்சொலாலன்றி யிருநீர்வியனுலகம், வன்சொலாலென்றும் மகிழாதே" என்றபடி இனிய சொல்லை வழங்குதலினால் உலகத்தினர் மகிழ்வடைவார்களென்பது ஒருதலையாதலால் அச்சொல்லை யுடையவன் யாவர்க்கும் இனியனாவானென்பது பெறப்படும். "சிறுமையுணீங்கிய வின்சொல் மறுமையும், இம்மையுமின்பதந்தரும்" என்பதும் ஈண்டறியத்தக்கது.

(116) "காலமறிந்தாங்கிட மறிந்து செய்வினையின், மூலமறிந்து விளைவதறிந்து மேலுந்தாம், சூழ்வன சூழ்ந்து துணைமை வலிதெரிந்து, ஆள்வினையாளப்படும்" என்றபடி காலவலிமை இடவலிமை, தொடங்கப்பெறும் கார்யத்தின் மூலம், தன் துணைவலிமை முதலியவற்றை நன்றாய் ஆராய்ந்து கார்யந்தொடங்குகின்றவன் தவறாது வித்தியடைவனாதலால் 'ஆராய்ந்து கார்யஞ்செய்பவன் மிக்க வெற்றியை யடைகிறான்' என்று சொல்லப்பட்டது.

(117) "பகைந்தாரிற்றீர்தலில் தீப்புகுதல் நன்று" சிநேகிதாது நீக்கம் மிக்கதுன்பத்தைத் தருமென்று சொல்லப்பட்டிருப்பதால் அவரது உறவு இன்பத்தைப் பயக்குமென்பது விளங்கும். மேலும் பல நண்பர்களையுடையவனுக்கு மிக்கவின்பமுண்டாமென்பது சொல்லாமலே பெறப்படுமாதலால் பலநண்பர்களையுடையவன் இன்பமாம வாழ்கிறான்' என்று சொல்லப்பட்டது.

(118) சிறப்பீனுஞ் செல்வமுமீனு மறத்தினூஉங், காக்க மெவனோ வுயிர்க்கு" என்றபடி எல்லாப் பலனையுந்தரவல்ல தர்மத்தை மறவாதிருப்பவனே சிறந்த பேற்றை யடைவானென்பது ஒருதலையாதலால் 'தர்மத்திற் பற்றுடையவன் எவனோ அவனே நற்கெதியடைகிறான்' என்று சொல்லப்பட்டது.

ஸ்ரீ

மதிப்புரை.

தமிழ்ப் பேரகராதி:— நமது திவாகரத்தின் நான்காவது வால்யம் 239-ம் பக்கத்தில் இவ்வகராதியைக் குறித்து விரிவாக ஒருகட்டுரை எழுதப்பெற்றுளது. மேலும், இரண்டாவது தொகுதியின் நான்காவது பகுதியும், மூன்றாவது தொகுதியின் முதல் மூன்று பகுதிகளும் இதுவரை நமது பார்வைக்கு வந்துள்ளன. ஆய்ந்தடங்கன்ற அறிவிற் சிறந்த பல பண்டிதர்களின் உதவியால் இந்நூல் வெளியாகின்றதினால் இது யாவர்க்கும் நல்லபயனைப் பயப்பதாகவே விளங்குகின்றது.

இவ்வகராதியின் இரண்டாவது தொகுதியின் நான்காவது பகுதியில் 'கைவிற்றல்' என்று தொடங்கப்பெற்று 'ஙனம்' என்பதிறுதியாகவும், மூன்றாவது தொகுதியின் முதற் பகுதியில் 'ச்' என்று தொடங்கப்பெற்றுச் 'சந்துஷ்டன்' என்பதீறாகவும், இரண்டாவது பகுதியில் 'சந்துஷ்டி' என்று தொடங்கப்பெற்று 'சில்லாவலி' என்பது முடிவாகும், மூன்றாவது பகுதியில் 'சில்லான்' என்று தொடங்கப் பெற்றுச் 'செபித்தல்' என்பது முடிவாகவும் உலகியல் வழக்கினும் புலனெறி வழக்கினும் வழங்கப்பெறும் எத்துணையோ தமிழ்ச் சொற்களுக்கு ஆகரத்தோடு பொருள் விளக்கம் குறிக்கப் பெற்றுளது. இப்பணியை மேற்கொண்டு நடத்தும் அதிகாரிகள் மேன்மேலும் குறைவின்றிக் கவனம் செலுத்தி யிருத்தல் களிபேருவகை யளிக்கிறது. ஒவ்வொரு பகுதியின் விலை ரூ. 2. வேண்டுவோர் The Madras Law gournal office, post box 604. Mylopore, Madras என்ற விலாசத்திற்கெழுதிப்பெற்றுக்கொள்க.

பத்திராதிபர்.